Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935

மலர் 2 சென்னை | தினசரி | 4 பக்கம் திங்கள்கிழமை, அக்டோபர் 24, 2022 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 102

# பயங்கரவாதத்தின் முடிவு பண்டிகை‘: ராணுவ வீரர்களுடன் தீபாவளி கொண்டாடிய பிரதமர் பேச்சு

சென்னை, அக்டோபர் 24 2022: கார்கில் எல்லையில் உள்ள ராணுவ வீரர்களுடன் பிரதமர் மோடி இன்று (அக்.,24) தீபாவளி கொண்டாடினார். பின்னர் உரையாற்றிய அவர், தீபாவளி என்றால் பயங்கரவாதத்தின் முடிவுப் பண்டிகை, கார்கில் அதை சாத்தியமாக்கியது' என்றார்.

மோடி பிரதமராக பதவியேற்றது முதல், ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி அன்று எல்லை பகுதிகளுக்கு சென்று, அங்குள்ள ராணுவ வீரர்களுடன் பண்டிகையை கொண்டாடுவதை வழக்கமாக வைத்துள்ளார். அதன்படி, 2014ல் சியாச்சின் பகுதி, 2015ல் பஞ்சாப் எல்லை, 2016ல் இமாச்சல பிரதேச எல்லை, 2017ல் ஜம்மு-காஷ்மீர் எல்லை, 2018ல் உத்தரகாண்ட், 2019ல் ஜம்மு-காஷ்மீர், 2020ல் ராஜஸ்தான் எல்லையில் உள்ள ராணுவ வீரர்களுடன் பிரதமர் தீபாவளி கொண்டாடினார்.



இந்தாண்டு தீபாவளி பண்டிகையை காஷ்மீரின் கார்கில் பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள ராணுவ வீரர்களுடன் தீபாவளி கொண்டாடினார். பின்னர் ராணுவ வீரர்களுடன் அவர் உரையாற்றியதாவது: என்னைப் பொறுத்தவரை, நீங்கள் (ராணுவ வீரர்கள்) அனைவரும் பல ஆண்டுகளாக எனது குடும்பமாக இருக்கிறீர்கள். உங்கள் அனைவருக்கும் மத்தியில் தீபாவளியைக் கொண்டாடுவது ஒரு பாக்கியம். இதை விட சிறந்த தீபாவளியை என்னால் கொண்டாடியிருக்க முடியாது. என் உற்சாகம், பலம் உங்களுடன் இருக்கிறது. போரில் வெற்றி பெற்ற இந்த கார்கில் மண்ணிலிருந்து, நாட்டு மக்களுக்கும், உலக மக்களுக்கும் எனது இனிய தீபாவளி வாழ்த்துகள் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீபாவளி என்றால் 'பயங்கரவாதத்தின் முடிவுப் பண்டிகை'; கார்கில் அதை சாத்தியமாக்கியது. கார்கிலில் நமது ராணுவம் பயங்கரவாதத்தை நசுக்கியது. நமது எல்லைகளை ஆயுதப்படைகள் பாதுகாப்பதால் தான், இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் நிம்மதியாக உறங்குகிறார்கள். நீங்கள் எல்லையில் இருந்து எங்களை பாதுகாப்பது போல் ஊழல் போன்ற தீமைகளை எதிர்த்து நாட்டிற்குள் செயல்படுகிறோம். இந்தியாவின் ஆயுதப் படைகளின் ஆத்மாவுக்கு நான் தலைவணங்குகிறேன். உங்களின் தியாகங்கள் எப்பொழுதும் நம் நாட்டை பெருமைப்படுத்துகின்றன. இவ்வாறு அவர் உரையாற்றினார்.

# தமிழகம்,புதுச்சேரி தெலுங்கானா மற்றும் அனைத்து இந்திய சகோதர, சகோதரிகளுக்கும் என் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள் - டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன்

சென்னை, அக்டோபர் 24 2022: தமிழகம், புதுச்சேரி தெலுங்கானா மற்றும் அனைத்து இந்திய சகோதர, சகோதரிகளுக்கும் என் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த தீபாவளி மகிழ்ச்சியின் வரிசையாகவும், வரிந்துகட்டி வரும் துன்பங்கள் வரிசையாக நாம் வைக்கும் ஒளியில் மறைந்து ஓடவும்....

இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு ஊசி பட்டாசு கொளுத்தி உவகையுடன் கொண்டாட வைத்து

கொரோனா எனும் கொடிய நோயை ஒழித்த தடுப்பூசியை நம் நாட்டிலேயே தயாரித்து நாட்டிற்கு அர்பணித்த பாரதப்பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களுக்கு நன்றி தெரிவித்து....



நாம் வாங்கும் விளக்குகள், புத்தாடைகள், இனிப்புகள், பட்டாசுகள் பரிசுப்பொருள்கள் அனைத்தும் நம் மண்ணின் மைந்தர்கள் உழைப்பில் உருவாகும் பொருட்களை வாங்கினால் இந்தியர் அனைவரின் வாழ்வும் ஒளிரும் என்ற பாரதப் பிரதமரின் வரிகளை நினைவு கூர்ந்து நாம் வாங்கும் பொருட்கள் எளிமையான எளியோரின் கொண்டாட்டங்களாகவும் மாறி அனைவரின் வாழ்க்கையிலும் ஒளியேற்றும் தீபாவளியாக மலரட்டும். சுய சார்பான இந்தியாவை படைக்க ஒளி தரும் தீபாவளியாக இந்த தீபாவளி அமையட்டும்.

பட்டாசுகளை எப்போதும்போல் வெடித்து நம் பராம்பரிய தீபாவளி திருநாளை கொண்டாடி சிவகாசியில் பணியுரியும் 8 லட்சம் பட்டாசு தொழிலாளர்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம்...

தீபாவளி திருநாளன்று நம் பராம்பரிய தன்வந்திரி பிரசாதமாம் "தீபாவளி மருந்தான" திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) உண்டு நம் உடல் நலம் காப்போம்...

அனைவருக்கும் இனிய நல்வாழ்த்துக்கள்.... - டாக்டர். திருமதி. தமிழிசை சௌந்தரராஜன்...

# சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சிறந்த கூட்டுறவு சங்கத்திற்கான கேடயம் பெற்ற சென்னை பெருநகர காவல் கூட்டுறவு சங்க நிர்வாகிகளை நேரில் அழைத்து பாராட்டு

சென்னை, அக்டோபர் 24 2022: சென்னை பெருநகர காவல்துறையில், காவலர் முதல் சிறப்பு உதவி ஆய்வாளர் வரையிலான காவல் ஆளிநர்களுக்கான சென்னை பெருநகர காவல் எக்சிக்யூட்டிவ் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம், கடந்த 2004ம் ஆண்டு முதல், புதுப்பேட்டை ஆயுதப்படை வளாகத்தில் இயங்கி வருகிறது. இச்சங்கத்தில் 2,508 காவல் ஆளிநர்களை உறுப்பினர்களாக சேர்ந்து சிறுசேமிப்பு திட்டம் மற்றும் கடன் வழங்கப்பட்டு, அதற்கான மாதச்சந்தா தொகைகள் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. இச்சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் மூலம் இச்சங்கத்தின் தலைவர், துணைத்தலைவர் மற்றும் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியமர்த்தி, உறுப்பினர்களின் கடன் தொகை, மாதச்சந்தா, ஈவு கணக்குகள் உள்ளிட்ட நிர்வாக கணக்குகள் பதிவேற்றம் செய்து திறம்பட நிர்வாகம் செய்து வருகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் தீபாவளிக்கு முன்பு கூட்டுறவு சங்கங்களின் பேரவை கூட்டப்படும். அதன்பேரில், இச்சங்கத்தின் 2021-2022ம் நிதியாண்டிற்கான 18வது பேரவைக் கூட்டத்தில், சென்னை பெருநகர காவல் எக்சிக்யூட்டிவ் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தின் ஆண்டறிக்கை வெளியிடப்பட்டு, அதில் ரூ.2,75,04,000/- ரூபாய் நிகர லாபம் ஈட்டி சங்க உறுப்பினர்களுக்கு பங்கு ஈவுத்தொகை மற்றும் சிறுசேமிப்பிற்கான வட்டி தொகையை வழங்கியது குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும், சங்க உறுப்பினர்களுக்கு அதிகபட்ச ஈவுத்தொகையான 14% ஈவுத்தொகை வழங்கப்பட்டுள்ளதும், உயிரிழந்த காவல் உறுப்பினர்களின் கடன்தொகை பிணையாளர் நிவாரண நிதி மூலம் தள்ளுபடி செய்யப்பட்டு, அவரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறி வருவது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. இந்நிலையில், மத்திய கூட்டுறவு வங்கியின் 92வது பேரவை பொதுக்கூட்டம் கடந்த 30.09.2022 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னையில் உள்ள 284 கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள், திறன் மற்றும் நிர்வாகம் அடிப்படையில் மதிப்பீடு செய்து, சென்னை பெருநகர காவல் எக்சிக்யூட்டிவ் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கம் உட்பட 20 கூட்டுறவு சங்கங்கள் சிறந்த கூட்டுறவு சங்கங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு, கேடயங்கள் வழங்கப்பட்டது. சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.சங்கர் ஜிவால், இ.கா.ப., அவர்கள் சிறப்பாக பணிபுரிந்து சிறந்த கூட்டுறவு சங்கத்துக்கான கேடயம் பெற்ற, சென்னை பெருநகர காவல் எக்சிக்யூட்டிவ் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தின் தலைவர், துணைத்தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகளான காவல் ஆளிநர்களை நேரில் அழைத்து பாராட்டினார். உடன் சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையாளர் (தலைமையிடம்) முனைவர் ஜெ.லோகநாதன்,இருந்தார்.



இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ஐ.நா. பொதுச்செயலாளருடன் பிரதமர் மோடி சந்திப்பு



சென்னை, அக்டோபர் 24 2022: குஜராத்தில் ஐ.நா. பொதுச்செயலாளரை பிரதமர் மோடி சந்தித்து பேசினார். பருவநிலை மாற்ற பாதிப்புகளில் இருந்து பூமியை காப்பதற்கான திட்டத்தை இருவரும் தொடங்கி வைத்தனர்.

ஐ.நா. பொதுச்செயலாளர் ஆன்டனி யோ குட்டரெஸ் 3 நாள் பயணமாக இந்தியாவுக்கு வந்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மும்பைக்கு வந்தார். நேற்று முன்தினம் மும்பையில் சில நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

இந்தநிலையில், நேற்று குஜராத் மாநிலம் கேவடியாவுக்கு சென்றார். அங்கு அவரை பிரதமர் மோடி சந்தித்து பேசினார். இருவரும் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர்.

பின்னர், கேவடியாவில் நடந்த நிகழ்ச்சியில், 'மிஷன் லைப்' என்ற புதிய திட்டத்தை இருவரும் கூட்டாக தொடங்கி வைத்தனர். திட்டத்தின் அடையாள சின்னம், முழக்கம் ஆகியவற்றையும் தொடங்கி வைத்தனர்.

இந்த திட்டம், பருவநிலை மாற்றத்தின் பாதிப்புகளில் இருந்து பூமியை பாதுகாப்பதை நோக்கமாக கொண்ட உலகளாவிய செயல் திட்டம் ஆகும்.

இந்த செயல் திட்டத்தில், பருவநிலைக்கு உகந்த விதத்தில் வாழ்க்கை முறையில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

தனிநபர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் பின்பற்ற வேண்டிய செயல்பாடுகள், தொழிற்சாலைகள் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறை, அரசாங்கம் கடைபிடிக்க வேண்டிய கொள்கை ஆகியவை இடம் பெற்றுள்ளன.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, "இது மக்களுக்கு ஆதரவான கிரகம் என்ற கருத்தை வலுப்படுத்த உதவும். மக்களின் கூட்டு அணுகுமுறையை மாற்றுவதற்கான மும்முனை வியூகத்தை பின்பற்றுவதை நோக்கமாக கொண்டது" என்று தெரிவித்தார்.

நாட்டின் முதலாவது சூரிய மின்சக்தி கிராமமாக அறிவிக்கப்பட்ட மோதெராவுக்கும் ஐ.நா. பொதுச்செயலாளர் ஆன்டனி யோ குட்டரெஸ் சென்று அங்கிருந்த கிராம பெண்களுடன் உரையாடினார்.

# பிரிட்டன் பிரதமர் தேர்தல்: இந்திய வம்சாவளியை சேர்ந்தவருக்கு பிரகாசமான வாய்ப்பு : பின்வாங்கினார் போரிஸ்





சென்னை, அக்டோபர் 24 2022: பிரிட்டனின் அடுத்த பிரதமரை தேர்வு செய்வதற்கான தேர்தலில் போட்டியில் இருந்து விலகுவதாக முன்னாள் பிரதமர் போரிஸ் ஜான்சன் அறிவித்துள்ளார். ஐரோப்பிய நாடான பிரிட்டனின் பிரதமர் பதவியை, போரிஸ் ஜான்சன் கடந்த ஜூலையில் ராஜினாமா செய்தார். ஆளும் பழமைவாத கட்சியின் தலைவராக இருப்பவரே பிரதமராக முடியும். இதையடுத்து நடந்த தேர்தலில், இந்திய வம்சாவளியான முன்னாள் நிதி அமைச்சர் ரிஷி சுனாக்கை வென்று, முன்னாள் வெளியுறவு அமைச்சர் லிஸ் டிரஸ் பிரதமராக பதவியேற்றார். ஆனால், அவர் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகள், நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தின. இதனால், 45 நாட்கள் பதவியில் இருந்த நிலையில், லிஸ் டிரஸ் சமீபத்தில் பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார். அடுத்த வாரத்துக்குள் கட்சியின் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்.

கட்சியின் 1.70 லட்சம் பிரதிநிதிகள் ஓட்டளிக்க உள்ளனர். இந்தத்தேர்தலில் பெண் எம்.பி.,யான பென்னி மோர்டார்ட், தலைவர் பதவிக்கு போட்டியிடுவதாக ஏற்கனவே அறிவித்துள்ளார். நேற்று (அக்.,23) ரிஷி சுனாக்கும் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்தார். அவருக்கு, கட்சியின், 128 எம்.பி.,க்களின் ஆதரவு இருப்பதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் தனக்கு 100க்கும் மேற்பட்ட எம்.பி.,க்கள் ஆதரவு இருப்பதாக கூறி வந்த முன்னாள் பிரதமர் போரிஸ் ஜான்சன், பிரிட்டன் பிரதமா பதவிக்கான தோதலில் போட்டியில் இருந்து விலகுவதாகவும், கன்சாவேட்டிவ் கட்சித் தலைவா பதவிக்கான தோதல் போட்டியில் இருந்தும் விலகுவதாகவும் அறிவித்துள்ளார். இதனால் ரிஷி சுனாக் அடுத்த பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட அதிக வாய்ப்புள்ளது.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 1.05 லட்சம் கன அடியாக நீடிப்பு



சென்னை, அக்டோபர் 24 2022: காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மீண்டும் மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1,05,000 கன அடியாக நீடிக்கிறது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்பிடிப்புப் பகுதிகளிலும், கேரளம் மாநிலம் வயநாட்டிலும் கன மழை பெய்து வருகிறது. மழையின் காரணமாக கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இரு அணைகளும் நிரம்பிய நிலையில் இருப்பதால் அணைக்கு வரும் நீர் முழுவதும் அணையின் பாதுகாப்பு கருதி காவிரியில் திறக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா அணைகளில் உபரி நீர் வரத்து காரணமாகவும் காவிரியின் உபநதிகளின் நீர் பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாகவும் காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் நேற்று மாலை முதல் மேட்டூர் அணைக்கு ஒரு நீரின் அளவு வினாடிக்கு 1,05,000 கன அடியாக நீடித்து வருகிறது.

மேட்டூர் அணை நீர்மட்டம் 120 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 1,05,000 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு 1,05,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நீர் மின் நிலையங்கள் வழியாக விநாடிக்கு 21,500 கன அடி வீதமும், உபரி நீர் போக்கி வழியாக வினாடிக்கு 83,500 கன அடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. கிழக்கு-மேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர் இருப்பு 93.47 டி.எம்.சி ஆக உள்ளது.

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு மேலும் அதிகரிக்கும் என்பதால் மேட்டூர் அணையில் இருகரைகளிலும் நீர்வளத் துறையினர் கண்காணிப்பை பலப்படுத்தியுள்ளனர். மேட்டூர் அணையின் இடது கரையில் உள்ள வெள்ளை கட்டுப்பாட்டு அறையில் பொறியாளர் தலைமையில் பணியாளர்கள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

# 4 மணி நேரத்தில் செஞ்சி தீபாவளி வார சந்தையில் ரூ.6 கோடிக்கு ஆடுகள் விற்பனை



சென்னை, அக்டோபர் 24 2022: காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மீண்டும் மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1,05,000 கன அடியாக நீடிக்கிறது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்பிடிப்புப் பகுதிகளிலும், கேரளம் மாநிலம் வயநாட்டிலும் கன மழை பெய்து வருகிறது. மழையின் காரணமாக கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இரு அணைகளும் நிரம்பிய நிலையில் இருப்பதால் அணைக்கு வரும் நீர் முழுவதும் அணையின் பாதுகாப்பு கருதி காவிரியில் திறக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா அணைகளில் உபரி நீர் வரத்து காரணமாகவும் காவிரியின் உபநதிகளின் நீர் பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாகவும் காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் நேற்று மாலை முதல் மேட்டூர் அணைக்கு ஒரு நீரின் அளவு வினாடிக்கு 1,05,000 கன அடியாக நீடித்து வருகிறது.

மேட்டூர் அணை நீர்மட்டம் 120 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 1,05,000 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து வினாடிக்கு 1,05,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நீர் மின் நிலையங்கள் வழியாக விநாடிக்கு 21,500 கன அடி வீதமும், உபரி நீர் போக்கி வழியாக வினாடிக்கு 83,500 கன அடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. கிழக்கு-மேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர் இருப்பு 93.47 டி.எம்.சி ஆக உள்ளது.

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு மேலும் அதிகரிக்கும் என்பதால் மேட்டூர் அணையில் இருகரைகளிலும் நீர்வளத் துறையினர் கண்காணிப்பை பலப்படுத்தியுள்ளனர். மேட்டூர் அணையின் இடது கரையில் உள்ள வெள்ளை கட்டுப்பாட்டு அறையில் பொறியாளர் தலைமையில் பணியாளர்கள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

# மருத்துவ சுற்றுலா தலமாக இந்தியா விரைவில் மாறும் சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா



சென்னை, அக்டோபர் 24 2022: இந்தியா விரையில் மருத்துவ சுற்றுலா தலமாக மாறும் என்று, இந்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மான்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

இந்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா மகாராஷ்டிர மாநிலம் அகமது நகரில் நடந்த நிகழ்ச்சியில் பல சுகாதார உட்கட்டமைப்பு திட்டங்களை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் டாக்டர் மன்சுக் மாண்டவியா பேசியதாவது:ஸ்ரீ

"நாம் உடல்நலம் மற்றும் சிகிச்சையில் கவனம் செலுத்த வேண்டும். பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் நாடு விரைவாக முன்னேறி வருகிறது. ஆரோக்கியமான குடிமகன் மட்டுமே தேசிய வளர்ச்சிக்கு பங்களிக்க முடியும் என்பதால், சுகாதாரத்தை, வளர்ச்சியுடன் இணைத்து பார்க்கிறது இந்திய அரசு. முதலில் நம் மக்கள் நோய்வாய்ப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அதனால்தான் இந்திய அரசு சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்களில் அதிக கவனம் செலுத்துகிறது.

மருத்துவ சுற்றுலா தலமாக மாறும்

அரசு மருத்துவ வசதிகளை உருவாக்குவது மட்டுமின்றி மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையையும், எம்பிபிஎஸ் படிப்புக்கான இடங்களின் எண்ணிக்கையையும் அதிகரித்து வருகிறது. "நம் இளைஞர்கள் மருத்துவக் கல்லூரிகளில் பட்டம் பெறுவதற்குள், நம் நாடு மருத்துவ சுற்றுலா மையமாக மாறி, உலகம் முழுவதும் உள்ள நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் இடமாக மாறும் என்றார்.

இந்திய அரசின் ஆராய்ச்சிக் கொள்கை குறித்து டாக்டர் மன்சுக் மாண்டவியா மேலும் கூறுகையில், "உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு 10 விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சி அறிஞர்களில் 3 பேர் இந்தியர்கள். அரசின் ஆராய்ச்சிக் கொள்கையானது புதுமையான ஆராய்ச்சித் திட்டங்களைத் தொடர விரும்பும் திறமையான இளைஞர்களை ஊக்குவிக்கிறது. இந்தியா புதுமை மற்றும் ஆராய்ச்சியில் முன்னணியில் இருக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

# நியூயார்க்கில் அடுத்த ஆண்டு முதல் தீபாவளிக்கு பள்ளிகள் விடுமுறை




சென்னை, அக்டோபர் 24 2022: நியூயார்க் நகரில் அடுத்த ஆண்டு முதல் தீபாவளி திருநாள் அன்று அரசு பள்ளிகளுக்கு பொது விடுமுறை அளிக்கப்படும் என்று மேயர் எரிக் ஆடம்ஸ் தெரிவித்துள்ளார்.

நியூயார்க் மேயர் எரிக் ஆடம்ஸ் கூறுகையில், "தீபாவளி மற்றும் தீபத் திருவிழா என்றால் என்ன என்பதைப் பற்றி நான் நிறைய கற்றுக்கொண்டேன். இந்த நடவடிக்கை, குழந்தைகள் தீபத் திருவிழாவைப் பற்றி அறிய ஊக்குவிக்கும். உங்களுக்குள் உள்ள ஒளியை எவ்வாறு இயக்குவது என்பதை அறிய அவர்கள் முற்படுவார்கள்" என்றார்.

தீபாவளியை பள்ளி விடுமுறையாக மாற்றியதற்காக ஆடம்சுக்கு நியூயார்க்கில் உள்ள இந்திய தூதரக அதிகாரி ரந்தீர் ஜெய்ஸ்வால் நன்றி தெரிவித்தார்.

அவர் கூறுகையில், "தீபாவளியை பள்ளி விடுமுறையாக அறிவிக்க வேண்டும் என்பது, இந்திய-அமெரிக்க சமூகத்தின் நீண்டகால கோரிக்கையாக இருந்து வந்தது. இதன்மூலம், அனைத்து தரப்பு மக்களும் இந்திய நெறிமுறைகள் மற்றும் பாரம்பரியத்தை அனுபவிக்கவும், கொண்டாடவும் முடியும்" என்றார்.

நியூயார்க் நகர பள்ளிகளின் தலைவர் கூறுகையில், "நியூயார்க் நகரம் அனைத்து சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் சொந்தமானது. அனைத்து சமூகங்கள் மற்றும் பின்னணியைச் சேர்ந்த குழந்தைகள் இங்கு பள்ளிக்குச் செல்கிறார்கள். ஆகவே, நமது இளைஞர்கள், அவர்களது குடும்பம் மற்றும் அவர்களின் நம்பிக்கையை நாம் மதிப்பதும் அங்கீகரிப்பதும் முக்கியம்" என்றார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
திங்கள்கிழமை,
அக்டோபர் 24, 2022

# தற்காலிக கூடாரத்தில் தொழிலாளர்களுடன் தங்கி உணவருந்திய பிரதமர் மோடி!



சென்னை, அக்டோபர் 24 2022: உத்தரகண்ட் மாநிலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க சென்ற பிரதமர் நரேந்திர மோடி, 11 ஆயிரத்து 300 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கூடாரத்தில் தொழிலாளர்களுடன் தங்கி, அவர்கள் சமைத்த உணவை சுவைத்தார்.

உத்தரகண்ட் மாநிலம் பத்ரிநாத், கேதார்நாத் கோவில்களில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் வழிபட்டார். இதைத் தொடர்ந்து, சீனாவுடனான எல்லையில் உள்ள கடைசி கிராமமான மனாவில், புதிய சாலைகள் அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தார்.

இதைத் தொடர்ந்து, கடல் மட்டத்தில் இருந்து, 11 ஆயிரத்து 300 அடி உயரத்தில் உள்ள மனாவில், எல்லை சாலை அமைப்பு மேற்கொள்ளும் சாலைப் பணிகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சிகளுக்குப் பின், பத்ரிநாத்தில் பிரதமர் இரவு தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆனால், சாலைப் பணிகளை பார்வையிட்ட பிரதமர் மோடி, தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள் தங்கும், தற்காலிக தகரத்தாலான கூடாரத்துக்குச் சென்றார். அங்கு, அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். இரவு அவர்களுடனேயே தங்கப் போவதாகக் கூறிய பிரதமர் மோடி, தனக்கும், தன்னுடன் வந்துள்ள அதிகாரிகளுக்கும் சேர்த்து சமைக்கும்படி கூறினார்.

வழக்கமாக ஊழியர்களுக்காக தயாரிக்கப்படும் கிச்சடி, சப்பாத்தி போன்றவை பிரதமருக்கும் வழங்கப்பட்டன. அவற்றை ருசித்து சாப்பிட்ட பிரதமர், நேற்று முன்தினம் இரவு அங்கேயே தங்கினார். சிறப்பாக உணவு தயாரித்த ஊழியர்களை அவர் பாராட்டினார். எல்லை சாலை அமைப்பின் சார்பில், அந்த ஊழியர்களுக்கு பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது.

# ‘இளைஞர்கள் அரசியலுக்கு வர வேண்டும்‘ - அண்ணாமலை



சென்னை, அக்டோபர் 24 2022: 'அரசியல் களத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள, இளைஞர்கள் அரசியலுக்கு வர வேண்டும்," என, பா.ஜ., மாநில தலைவர் அண்ணாமலை பேசினார்.

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலு□ர் கொங்கு மெட்ரிக்., பள்ளியில், முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நடந்தது. 1997 முதல், 2022 வரை பள்ளியில் படித்தவர்கள் பங்கேற்றனர். முன்னாள் மாணவர் என்ற முறையில், பா.ஜ., மாநில தலைவர் அண்ணாமலையும் பங்கேற்றார். நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

அரசியல் என்பது ஓர் ஆரோக்கியமான களம். அதை ஆரோக்கியமாக வைத்திருக்க, இளைஞர்களால் மட்டுமே முடியும். ஆகையால், இளைஞர்கள் அரசியலுக்கு அதிகம் வர வேண்டும்; அரசியலை யாரும் ஒதுக்க வேண்டாம்.

உங்களால் முடியாவிட்டாலும், உங்கள் பகுதியில் உள்ள நல்லவரை, உங்கள் பஞ்., தலைவராக முன்னிறுத்தி, அவர் மூலம் மக்களுக்கும், ஊருக்கும் நன்மை செய்ய முயற்சிக்க வேண்டும். தமிழகத்தில் மொத்த 'சிஸ்டமும்' கெட்டுவிட்டது என்பது உண்மை தான். அதை உடனடியாக சரி செய்ய முடியாது.

ஒவ்வொரு பகுதியாக, அவரவர் கடமை உணர்ந்து, அவரவருக்கு உரிய சமூக பணிகளை ஆற்ற வேண்டும். முன்னாள் மாணவர் சந்திப்பு அடிக்கடி நடக்க வேண்டிய ஒரு நல்ல விஷயம். இவ்வாறு அவர் பேசினார்.

கொரோனாவால் பெற்றோரை இழந்த, பள்ளி முன்னாள் மாணவர், மாணவியர் ஐந்து பேருக்கு, தலா 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

# துணைவேந்தர் பதவிகள் விற்பனை; விசாரணை கேட்கிறார் விஜயகாந்த்



சென்னை, அக்டோபர் 24 2022: துணைவேந்தர் பதவிகள் விற்கப்பட்டதாக கூறப்படும் விவகாரத்தில், ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் குழு அமைத்து, உரிய விசாரணை நடத்த வேண்டும்' என, தே.மு.தி.க., தலைவர் விஜயகாந்த் கூறியுள்ளார்.

தமிழகத்தில் பல்கலை துணைவேந்தர் பதவிகள், 50 கோடி ரூபாய் வரை விற்கப்பட்டதாக, தமிழக முன்னாள் கவர்னரும், தற்போதைய பஞ்சாப் கவர்னருமான பன்வாரிலால் புரோஹித் குற்றஞ்சாட்டி உள்ளது, பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

பல்கலை துணை வேந்தர் பதவிகளை, கவர்னர் தான் நிரம்புகிறார். அவ்வாறு இருக்கும் போது, துணை வேந்தர் பதவிகள் விற்கப்பட்டதாக, தமிழக கவர்னராக இருந்தவர் கூறுவது வேதனையாக உள்ளது.

அரசு துறையில் வேலை வாங்கி தருவதாக கூறி, முன்னாள் அமைச்சர்கள் மீது ஏற்கனவே பல்வேறு ஊழல் புகார்கள் உள்ளன. தற்போது, துணை வேந்தர் பதவிகளும் விற்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இது போன்ற ஊழல்கள் தொடர்ந்தால், கல்வியின் தரம் மற்றும் பல்கலைகளின் தரம் எப்படி இருக்கும்.

துணைவேந்தர் பதவிகள் விற்கப்பட்டதாக கூறப்படும் விவகாரத்தில், ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் குழு அமைத்து, உரிய விசாரணை நடத்த வேண்டும்.

இவ்வாறு விஜயகாந்த் கூறியுள்ளார்.

# பொருளாதார நெருக்கடியால் இங்கிலாந்து பிரதமர் லிஸ் டிரஸ் திடீர் ராஜினாமா



சென்னை, அக்டோபர் 24 2022: பொருளாதார நெருக்கடியினால் சொந்தக்கட்சியில் எதிர்ப்பு வலுத்ததால் இங்கிலாந்து பிரதமர் லிஸ் டிரஸ் திடீரென பதவியை ராஜினாமா செய்துள்ளார். இங்கிலாந்து பிரதமர் லிஸ் டிரஸ் இங்கிலாந்து நாட்டில் பிரதமராக இருந்த போரிஸ் ஜான்சன் இதுவரை இல்லாத வகையில், தொடர்ந்து சர்ச்சைகளில் சிக்கியதைத் தொடர்ந்து கன்சர்வேடிவ் கட்சித்தலைவர் பதவியை ராஜினாமா செய்தார்.

கட்சியின் புதிய தலைவராக போரிஸ் ஜான்சன் மந்திரிசபையில் அங்கம் வகித்த பெண் பிரபலமான லிஸ் டிரஸ் (வயது 47) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதையடுத்து போரிஸ் ஜான்சன் கடந்த மாதம் 6-ந் தேதி பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார்.

அந்த நாட்டின் வழக்கப்படி, பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட லிஸ் டிரஸ், ஸ்காட்லாந்து சென்று, அங்கு பால்மோரல் கோட்டையில் ஓய்வு எடுத்து வந்த ராணி இரண்டாம் எலிசபெத்தை சந்தித்தார். அவரை பிரதமராக நியமித்து ராணி இரண்டாம் எலிசபெத் உத்தரவிட்டார். அந்த நாளிலேயே (செப்டம்பர்-6), லிஸ் டிரஸ், இங்கிலாந்தின் பிரதமர் ஆனார்.

பொருளாதார சவால்

அவர், கொரோனா பெருந்தொற்றுக்கு பிந்தைய பொருளாதார நெருக்கடிகளில் இருந்து இங்கிலாந்தை மீட்பாரா என்ற மிகப்பெரிய கேள்வி எழுந்தது.

இந்த நிலையில் அங்கு தாக்கல் செய்யப்பட்ட மினி பட்ஜெட்டில் அதிக வருமானம் உள்ளவர்களுக்கு 45 சதவீத வரி உயர்வு ரத்து செய்யப்பட்டது. இதனால் பங்குச்சந்தை தடுமாறியது. பொருளாதாரம் பாதிப்புக்கு ஆளானது.

இதையடுத்து நிதி மந்திரி குவாசியை, அவர் பதவி ஏற்ற 38 நாளிலேயே லிஸ் டிரஸ் பதவி நீக்கம் செய்தார். அதன்பின்னர் புதிய நிதி மந்திரியாக ஜெர்மி ஹண்ட் நியமிக்கப்பட்டு வரி குறைப்பு வாபஸ் ஆனது. தனது தவறுகளுக்காக பிரதமர் லிஸ் டிரஸ் மன்னிப்பு கேட்டார்.

சொந்தக் கட்சியில் எதிர்ப்பு

ஆனால் அவருக்கு அவருடைய சொந்தக்கட்சியான ஆளும் கன்சர்வேடிவ் கட்சியிலேயே எதிர்ப்பு கிளம்பியது. அவர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று கோரிக்கை வலுக்கத்தொடங்கியது.

இந்த நிலையில் சர்ச்சையில் சிக்கிய உள்துறை மந்திரியான இந்திய வம்சாவளி சூவெல்லா பிரேவர்மன் பதவி விலகினார்.

2 மந்திரிகள் அடுத்தடுத்து மந்திரிசபையில் இருந்து வெளியேறியது, லிஸ் டிரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது.

ராஜினாமா அறிவிப்பு

இந்த நிலையில் லிஸ் டிரஸ் நேற்று அதிரடியாக கன்சர்வேடிவ் கட்சித்தலைவர் பதவியில் இருந்தும், பிரதமர் பதவியில் இருந்தும் ராஜினாமா செய்வதாக அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

கன்சர்வேடிவ் கட்சித்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டபோது வழங்கப்பட்ட ஆணையை என்னால் நிறைவேற்ற முடியவில்லை. எனவே பதவியை ராஜினாமா செய்வதாக மன்னருக்கு தெரிவித்து விட்டேன்.

கன்சர்வேடிவ் கட்சியின் அடுத்த தலைவரை (பிரதமரை) தேர்வு செய்யும் நடைமுறைகளை அடுத்து வாரத்திற்குள் முடிக்க வேண்டும். அதுவரையில் நான் பிரதமர் பதவியில் தொடருவேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

45 நாள் பதவி

லிஸ் டிரஸ் 45 நாளில் பதவியைத் துறந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து சரித்திரத்தில் மிகக்குறைந்த காலமே (வெறும் 45 நாட்கள்) பிரதமர் பதவி வகித்தவர் என்ற பெயரை லிஸ் டிரஸ் பெறுகிறார்.

இவரது ராஜினாமாவால் இங்கிலாந்து 4 ஆண்டுகளில்( தெரசா மே, போரிஸ் ஜான்சன், லிஸ் டிரஸ் ) 4-வது பிரதமரை சந்திக்க உள்ளது. அந்த 4-வது பிரதமர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. லிஸ் டிரசுடன் பிரதமர் பதவி போட்டியில் இருந்த இந்திய வம்சாவளி ரிஷி சுனக் மீது அனைவரது பார்வையும் படிந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஞ்

இங்கிலாந்தில் கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சி நடத்தி வருகிறது. முன்னாள் நிதியமைச்சர் ரிஷி சுனக், முன்னாள் உள்துறை அமைச்சர் சுயெல்லா பிராவர்மேன், முன்னாள் பிரதமர் போரிஸ் ஜான்சன், கட்சியின் மூத்த தலைவர்கள் பென்னி மொர்டான்ட், பென் வாலஸ், ஜெரோமி ஹண்ட் உள்ளிட்டோர் பிரதமர் பதவிக்கு போட்டியிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதல்கட்டமாக கட்சி எம்.பி.க்கள் இடையே உட்கட்சி தேர்தல் நடத்தப்படும். அவர்களின் வாக்குகளின் அடிப்படையில் 2 வேட்பாளர்கள் தேர்வு செய்யப்படுவர். இறுதிக்கட்டமாக கட்சி உறுப்பினர்கள் வாக்களிப்பார்கள். இதில் அதிக வாக்குகளை பெறும் வேட்பாளர் இங்கிலாந்தின் புதிய பிரதமராக பதவியேற்பார்.

லிஸ் ட்ரஸ் பதவி விலகலுக்குப் பிறகு பிரதமர் பதவிக்கான போட்டியில் இருக்கும் ரிஷி சுனக், சுயெல்லா பிராவர்மேன் ஆகியோர் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்கள் ஆவர்.

ரிஷி சுனக் பஞ்சாபை பூர்வீகமாகக் கொண்டவர். இன்போசிஸ் நிறுவன தலைவர் நாராயண மூர்த்தியின் மகள் அக்சதா மூர்த்தியை திருமணம் செய்துள்ளார். மற்றொரு வேட்பாளர் சுயெல்லா பிராவர்மேனின் தந்தை கிறிஸ்டி பெர்னாண்டஸ் கோவா மாநிலத்தை சேர்ந்தவர். அவரது தாய் உமா தமிழகத்தை பூர்வீகமாகக் கொண்டவர்.

இப்போதைய சூழ்நிலையில் ரிஷி சுனக் பிரதமராக அதிக வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. கடந்த முறை ஆளும் கட்சி எம்.பி.க்களில் 137 பேர் ரிஷியை ஆதரித்தனர். லிஸ் ட்ரஸுக்கு 113 எம்.பி.க்கள் மட்டுமே ஆதரவு அளித்தனர். ஆனால் கன்சர்வேட்டிவ் கட்சியினர் வாக்களித்தபோது ரிஷிக்கு 42.6 சதவீத வாக்குகள் மட்டுமே கிடைத்தன. லிஸ் ட்ரஸ் 57.4 சதவீத வாக்குகளைப் பெற்று பிரதமராக பதவியேற்றார்.

இந்த முறை எம்.பி.க்கள் மட்டுமே வாக்களித்து புதிய பிரதமரை தேர்வு செய்யக்கூடும் என்றும் தகவல்கள் வெளியாகி வருகின்றன. இதன்படி ரிஷி சுனக் புதிய பிரதமராக பதவியேற்க அதிக வாய்ப்புகள் உள்ளன. எனினும் முன்னாள் பிரதமர் போரிஸ் ஜான்சனும் போட்டியில் களமிறங்குவதால் இருவருக்கும் இடையே கடுமையான போட்டி நிலவும் என்று தெரிகிறது.

இப்போதைய நிலையில் கன்சர்வேட்டிவ் கட்சி எம்.பி.க்கள் மத்தியில் ரிஷி சுனக்குக்கு 21 சதவீத ஆதரவும் போரிஸ் ஜான்சனுக்கு 16 சதவீத ஆதரவும் இருப்பதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இங்கிலாந்தின் புதிய பிரதமராக ரிஷி பதவியேற்றால் அந்த நாட்டில் முதல் இந்திய வம்சாவளி பிரதமர் என்ற பெருமையை பெறுவார்.

ஹலோ மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

# சிவகங்கை அருகே 108 ஆம்புலன்ஸ் மரத்தில் மோதி விபத்து: கர்ப்பிணி, தாயார், சிசு உயிரிழந்த பரிதாபம்



சென்னை, அக்டோபர் 24 2022: சிவகங்கை அருகே 108 ஆம்புலன்ஸ் வாகனம் மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் கர்ப்பிணி பெண், அவரது தாயார், வயிற்றில் இருந்த குழந்தை ஆகியோர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியை அடுத்துள்ள நெஞ்சாத்தங்குடி கிராமத்தை சேர்ந்தவர்கள் குமரேசன்-நிவேதா தம்பதி. நிவேதா தற்போது நிறைமாத கர்ப்பிணியாக உள்ள நிலையில், இன்று அதிகாலை அவருக்கு பிரசவ வலி ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து நிவேதா, அவரது தாயார் விஜயலெட்சுமி, மற்றும் நிவேதாவின் சகோதரி திருச்செல்வி ஆகியோர் 108 ஆம்புலன்ஸ் வாகனம் மூலம் சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றுள்ளனர்.

3 உயிர்கள் பலி

108 வாகனத்தை மலையரசன் என்கிற ஓட்டுநர் மற்றும் டெக்னிசியன் சத்யா ஆகியோர் ஓட்டிவந்த நிலையில், ஊத்திகுளம் அருகே வரும்போது, வாகனம் கட்டுப்பாட்டை இழந்து எதிரே இருந்த மரத்தின் மீது மோதியுள்ளது. இதில் அனைவரும் படுகாயமடைந்தனர். உடனடியாக மற்றோரு 108 ஆம்புலன்ஸ் வாகனம் வரவழைக்கப்பட்டு அனைவரும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் கர்ப்பிணி பெண் நிவேதா, அவரது தாயார் விஜயலெட்சுமி ஆகியோர் உயிரிழந்ததாக தெரிவித்தனர். நிவேதாவின் வயிற்றில் இருந்த குழந்தையை காப்பாற்ற முயற்சித்துள்ளனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக குழந்தையும் உயிரிழந்தது.

மேலும் படுகாயமடைந்த நிவேதாவின் சகோதரி திருச்செல்வி, ஓட்டுநர் மலையரசன், டெக்னிசியன் சத்யா ஆகியோருக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.108 ஆம்புலன்ஸ் மரத்தில் மோதிய விபத்தில் கரப்பிணி பெண், அவரது தாயார், மற்றும் வயிற்றில் இருந்த சிசு உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# எம் எஸ் எம் ஈ -ன் புதிய தலைவராக டாக்டர் இ.முத்துராமன் நியமிக்கப்பட்டுள்ளார்



சென்னை, அக்டோபர் 24 2022: குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் மேம்பாட்டு கவுன்சிலின் புதிய தலைவராக டாக்டர் இ முத்துராமன் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னதாக, கவுன்சிலின் துணைத் தலைவராக இருந்தார். கவுன்சிலில் அவரது தீவிர பங்களிப்பின் காரணமாக இப்போது அவர் சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் மேம்பாட்டு கவுன்சிலின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன், டில்லியில் டாக்டர் இ.முத்துராமனிடம் பணி நியமனக் கடிதத்தை வழங்கினார்.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியை சேர்ந்த டாக்டர் இ.முத்துராமன் அமெரிக்காவின் விஸ்டம் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு நலத்திட்டங்களில் ஈடுபட்டு வருகிறார். கோவிட் தொற்றுநோய்களின் போது சிறப்பாக பணியாற்றியதற்காக மத்திய அமைச்சர் ராம்தாஸ் அத்வாலே அவர்களால் பாராட்டப்பட்ட டாக்டர். இ.முத்துராமன், தெலுங்கானா மாநிலத்தின் மாநிலக் கிடங்கின் இயக்குநராகவும், இந்திய உணவு சங்கத்தின் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், இந்திய தரநிலைகள் பணியகத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் முன்பு பணியாற்றியுள்ளார்.

# தமிழக சட்ட கல்லூரி மாணவர்கள் மீது ஆந்திர சுங்கச்சாவடி ஊழியர்கள் தாக்குதல்



சென்னை, அக்டோபர் 24 2022: தமிழக சட்டக்கல்லுரி மாணவர்கள் மீது, ஆந்திர மாநில சுங்கச்சாவடி ஊழியர்கள், கொலைவெறித்தாக்குதல் நடத்தியதும், அம்மாநில போலீசார் வேடிக்கை பார்த்ததும், பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. படுகாயமடைந்த 10 மாணவர்கள், திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆந்திர மாநிலம், திருப்பதியில் உள்ள சட்டக் கல்லுரிகளில், சட்டம் பயின்று வருகின்றனர். இவர்கள் நேற்று கல்லுரிக்கு சென்று தேர்வு எழுதினர். தேர்வு முடிந்து, நான்கு கார்களில், 25க்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆந்திர மாநிலம், புத்துர், வடமாலப்பேட்டை அருகே உள்ள சுங்கச்சாவடி வழியாக வந்து கொண்டிருந்தனர்.

அப்போது, சுங்கச்சாவடியில், 'பாஸ்ட் டேக் ஸ்கேனர்' சரிவர செயல்படாததால், சட்டக் கல்லுரி மாணவர்களிடம், 40 ரூபாய்க்கு பதிலாக, ஒரு காருக்கு 160 ரூபாய் வீதம் செலுத்துமாறு, சுங்கச்சாவடி ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் மாணவர்கள், 'எங்கள் பாஸ்ட் டேக்கில் பணம் உள்ளது; உங்களது தொழில்நுட்ப பிரச்னையால், நாங்கள் 160 ரூபாய் செலுத்த முடியாது; 40 ரூபாய் தான் செலுத்துவோம்' என, தெரிவித்து உள்ளனர்.

இதனால், இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த, ஆந்திர சுங்கச்சாவடி ஊழியர்கள், மாணவர்களை இரும்பு ராடு மற்றும் உருட்டை கட்டைகளால் தாக்கினர். மாணவர்கள் வந்த கார்களின் கண்ணாடிகள் உடைத்தனர். தப்பி வந்த மாணவர்களில் 10 பேர், படுகாயத்துடன், திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லுரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த தாக்குதல் நடந்தபோது, ஆந்திர மாநில போலீசார் அங்கு இருந்தும், எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல், வேடிக்கை பார்த்தனர் என, தமிழக மாணவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். மாணவர்கள் தாக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதை அறிந்த, 100க்கும் மேற்பட்ட மாணவர்கள், திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லுரி மருத்துவமனையில் குவிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

# உள்நாட்டு விமானப் பயணிகளின் எண்ணிக்கை 47 சதவீதமாக உயர்வு



சென்னை, அக்டோபர் 24 2022: கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, நடப்பாண்டு செப்டம்பர் மாதத்தில் உள்நாட்டு விமான பயணிகளின் எண்ணிக்கை 47 சதவீதம் அதிகரித்துள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்து இயக்குனரகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தை விட, 2022 செப்டம்பர் மாதத்தில் உள்நாட்டு விமான பயணிகளின் மொத்த எண்ணிக்கை 47 சதவீதம் அதிகரித்து, 1.03 கோடியாக உயர்ந்துள்ளது. அதேபோன்று கடந்த 2022 ஆகஸ்ட் மாதத்தை விட செப்டம்பர் மாதம் உள்நாட்டு விமான பயணிகளின் எண்ணிக்கை இரண்டு சதவீதம் அதிகரித்துள்ளது.

இன்டிகோ நிறுவனம் முதலிடம்

அது மட்டுமல்லாமல், அனைத்து நிறுவனங்களின் பயணிகள் விமானங்களின் இருக்கைகள் நிரப்பப்படும் விகிதம், ஆகஸ்ட்டில் 72.5 சதவீதமாக இருந்த நிலையில் செப்டம்பரில் 77 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இதைத்தொடர்ந்து, விமான சேவை நிறுவனங்களில் முதல் இடத்தில் உள்ள இன்டிகோ நிறுவனத்தின் சந்தைப் பங்கு கடந்த செப்டம்பர் மாதத்தில் 57.7 சதவீதமாகவும், இரண்டாம் இடத்தில் 9.6 சதவீத சந்தைப் பங்குடன் விஸ்தாராவும், மூன்றம் இடத்தில் 8.7 சதவீத சந்தை பங்குடன் ஏர் இந்தியாவும் உள்ளன. அதேபோல், சரியான நேரத்தில் இயக்கப்படும் விமானங்கள் விகிதத்தில், முதல் இடத்தில் விஸ்தாரா நிறுவனம் 91 சதவீதத்துடன் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தீபாவளி வாழ்த்து

சென்னை, அக்டோபர் 24 2022: தீபாவளி கொண்டாடும் இந்து சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

இந்தியத் திருநாடு, ஆன்மீகத்தில் முதன்மை பெற்றுத் திகழும் புண்ணிய பூமி. இங்குள்ளோர் எல்லோரும் ஒரு தாய் மக்கள் என்ற உணர்வில் திளைத்தவர்கள். அந்த உணர்வை உலகம் முழுவதும் பரப்ப இந்த திருநாளில் அனைவரும் முனைவோம். வாழ்க இந்தியத் திருநாடு, வளர்க மானிட நேயம்! எல்லோருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

இவ்வாறு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் கூறியிருக்கிறார்.



# குமரன்நகர் பகுதியில் மது அருந்தும்போது நண்பர்களுக்குள் ஏற்பட்ட தகராறில் கத்தியால் தாக்கி கொலை முயற்சியில் ஈடுபட்ட தந்தை மகன் உட்பட 3 நபர்கள் கைது. 1 கத்தி பறிமுதல்









சென்னை, அக்டோபர் 24 2022: சென்னை, சைதாப்பேட்டை, தேவநாயுடு தெருவைச் சேர்ந்த உதயகுமார், வ/26, த/பெ.ராஜேந்திரன் என்பவர் அவரது நண்பர் யுவராஜ், வ/27 என்பவருடன் சிறு பிரச்சினை காரணமாக பேசாமல் இருந்து வந்துள்ளார். இந்நிலையில், யுவராஜ் அவரது தந்தை உதயகுமார், நண்பர் சந்திரன் ஆகியோருடன் சேர்ந்து கடந்த 21.10.2022 அன்று இரவு மேற்படி உதயகுமாரை மது அருந்த அழைத்துச் சென்று, அவரது வீட்டினருகே, சைதாப்பேட்டை, சுப்ரமணிய சாலையில் மது அருந்திக் கொண்டிருந்தனர். அப்பொழுது, உதயகுமாருக்கும், யுவராஜுக்கும் வாய் தகராறு ஏற்பட்டபோது, யுவராஜ் தான் மறைத்து வைத்திருந்த கத்தியாலும், மற்ற இருவரும் கைகளாலும், உதயகுமாரை தாக்கிவிட்டு தப்பிச் சென்றனர். சத்தம் கேட்டு அருகிலிருந்தவர்கள் உதயகுமாரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்து வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து உதயகுமாரின் மனைவி கொடுத்த புகாரின்பேரில், ஆர்-6 குமரன் நகர் காவல் நிலையத்தில் கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்தனர்.

ஆர்-6 குமரன் நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி கொலை முயற்சி சம்பவத்தில் ஈடுபட்ட 1.சந்திரன், வ/44, த/பெ.விஜயன், பூந்தமல்லி மெயின், ஈக்காட்டுத்தாங்கல், சென்னை, 2.யுவராஜ், வ/27, த/பெ.உதயகுமார், குமாரசாமி தெரு, சுப்ரமணிய சாலை, சைதாப்பேட்டை, இவரது தந்தை 3.உதயகுமார், வ/54, த/பெ.வரதன் ஆகிய மூவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

# தூய்மைப் பணியாளர்களை மீண்டும் மீண்டும் வஞ்சிப்பதா?அரசு நிர்ணயித்த சம்பளம், சலுகைகளை வழங்க வேண்டும்!கோவை மாநகராட்சிக்கு மநீம கடும் கண்டனம்

சென்னை, அக்டோபர் 24 2022: கோவை மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களை வஞ்சிக்கும் முயற்சியைக் கைவிட்டு, அரசு நிர்ணயித்த சம்பளத்தை உடனே வழங்க வேண்டும். மேலும், பணி நிரந்தரம், போனஸ், வேலை நேர நிர்ணயம் உள்ளிட்ட கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

ஊரையெல்லாம் சுத்தம் செய்யும் தூய்மைப் பணியாளர்களின் நிலை எப்போதும் பரிதாபத்துக்குரியதாகவே இருக்கிறது. கொரோனா காலத்தில் தங்களது உயிரையும் பொருட்படுத்தாது, கடும் உழைப்பைத் தந்த முன்களப் பணியாளர்களான இவர்களின் அடிப்படைக் கோரிக்கைகளைக்கூட நிறைவேற்றாமல் இருப்பது நியாயமற்றது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் தனியார் மூலம் 10 ஆண்டுகளுக்கும் மேலாக, ஒப்பந்த அடிப்படையில் தூய்மைப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு தமிழக அரசு நிர்ணயித்த தினச் சம்பளம் ரூ.721. ஆனால், ஒப்பந்ததாரரர் வழங்குவதோ ரூ.333. இத்தனை குறைந்த சம்பளத்தில் வாழ்வது எப்படி?

இதேபோல, கோவை மாவட்டம் முழுவதும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மிகக் குறைந்த சம்பளத்துக்குப் பணிபுரிகின்றனர். குறிப்பாக, ஊராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு ரூ.100 மட்டுமே தினச் சம்பளமாக வழங்குவது கொடுமையானது. மேலும், தங்களை பணி நிரந்தரம் செய்யக் கோரி பல்லாண்டுகளாக வலியுறுத்தி வரும் நிலையில், அந்தக் கோரிக்கையும் நிறைவேறவில்லை. கோவை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் காலை 5.45 மணிக்கே பணியைத் தொடங்க வேண்டும். நகரிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட தூய்மைப் பணியாளர்கள், அந்த நேரத்தில் பணிக்கு வருவது எப்படி? பேருந்து வசதி இல்லாமல் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகின்றனர். இருட்டு நேரத்தில் இருசக்கர வாகனத்தில் பணிக்கு வரும்போது பலரும் விபத்துக்கு உள்ளாகியுள்ளனர். ஆங்கிலேயர் காலத்து வேலை நேரத்தைக் கைவிட்டு, காலை 7 மணிக்குப் பணியைத் தொடங்க அனுமதிக்க வேண்டும்.

தீபாவளிக்கு சட்டரீதியான போனஸ்கூட கொடுக்கவில்லையாம். இனாம் தான் கொடுத்துள்ளனர் என்று வேதனை தெரிவிக்கின்றனர். இதுபோல 18 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி கோவை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் போராடியபோது, மேயர் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தி, சிறப்பு மாமன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றுவதாக உறுதியளித்துள்ளனர்.

இதை நம்பி தூய்மைப் பணியாளர்களும் போராட்டத்தைக் கைவிட்டு, பணிக்குத் திரும்பியுள்ளனர்.

ஆனால், ஒப்பந்தப் பணியாளர் சம்பள உயர்வு தொடர்பாக அரசு அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பலாம் என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். இதுகுறித்து நகராட்சி நிர்வாக ஆணையரை தூய்மைப் பணியாளர்கள் தொடர்புகொண்டு கேட்டபோது, சம்பளத்தை நிர்ணயம் செய்வதற்கும், தங்களுக்கும் தொடர்பு இல்லை, மாநகராட்சி ஆணையரே சம்பளத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று பதில் வந்துள்ளது.

தங்களது வாழ்வாதாரத்துக்காகப் போராடும் தூய்மைப் பணியாளர்களுக்காக, மக்கள் நீதி மய்யம் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது. கோவை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள், தங்களது கோரிக்கைகளுக்காக வரும் 25-ம் தேதி முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இப்போராட்டத்துக்கு மக்கள் நீதி மய்யம் முழு ஆதரவு தெரிவிப்பதுடன், அவர்களுடன் இணைந்துப் போராட்டம் நடத்தும். இப்பிரச்சினை தீவிரமடைவதற்கு முன், தமிழக முதல்வர் தலையிட்டு, உடனடியாக தீர்வுகாண வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம். - ஆர். தங்கவேலு, துணைத் தலைவர், மக்கள் நீதி மய்யம்.